**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.831/2022**
**Prosecution Witnesses :2**

| | | | |
|---|---|---|---|
| Name | : நாகதேவி | Caste | : |
| Husband Name/ Father Name | : வீரபாண்டி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)
**(29.01.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது அவனியாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். கடந்த 02.01.2022ம் தேதி எனது பாட்டி சந்திரலேகா என்பவருக்கு பெருங்குடி கருப்பணசாமி கோவில் அருகே விபத்து ஏற்பட்டதாக என்னிடம் எனது அம்மா போன் மூலம் தகவல் சொன்னார். நான் எனது பாட்டியை மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது எனது பாட்டி ICU –வில் கோமாவில் இருந்தார். பின்னர் 04.01.2022ம் தேதி எனது பாட்டி இறந்துவிட்டதாக எனது மாமா தகவல் சொன்னார். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள அறிவேன் சாட்சிக்கையெழுத்தும் என்னுடையது தான். **அந்த அறிவேன் சாட்சிக்கையெழுத்து அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சம்பவ நேரத்தில் ஜெய்கிந்த்புரத்தில் குடியிருந்து வந்ததால் எனக்கு சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது. அ.சா.1 எனது மாமா ஆவார்.

அ.சா.1 அழைத்ததின் பேரில் காவல் நிலையம் வந்தேன் என்றால் சரிதான். போலிசார் எழுதிக்கொண்டதில் அ.சா.1ம் நானும் கையெழுத்து போட்டோம். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. போலிசார் அ.சா.1 எனது மாமாவை மட்டும் விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**மறுவிசாரணை** . இல்லை